திரு. துரை முத்துசாமி: அவர் பேசியது பாயின்ட் ஆப் ஆர்டரா? பாயின்ட் ஆப் இன்பர்மேஷனு? எது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற வகையில் என்னுடைய அனுமதிப் பெற்றுப் பேசினுர். இது சபையில் தினசரி நடைபெறுகின்ற ஒன்றுதான்.

(3) அறிவிப்பு

(இ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1977-ம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் 44-வது திருத்தச் சட்ட முன்வடிவுக்கு ஏற்பளிக்கும் தீர்மானம் 13—3—78-ம் தேதியன்று வினுக்கள்-விடைகளுக்குப் பின்பும் அன்றைய தினம் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டிய மானியக் கோரிக்கைகளுக்கு முன்பும் எடுத்துக் கொள்ளப்பெறும். தேவையிருப்பின், பேரவை அன்று மாலையிலும் கூடும்.

திரு. மு. அம்பிகாபதி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மானியக் கோரிக்கை எண். 28-சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் . . .

ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தபின், அது சபையில் எடுத்துக் கொள்வதற்கு முன் ஒழுங்கு பிரச்னை எழுப்புவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சிக்குப் போய் விட்டேன். மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்துவிட்ட பிறகு என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. மு. அம்பிகாபதி: இடையிலே பேச எழுந்தேன். எனக்கு மைக் கூட வேண்டாம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லாமல் பேசக் கூடாது. ஒரு நிமிஷத்தில் நான் எல்லாவற்றையும் நீக்கிவிட முடியும்.

திரு. மு. அம்பிகாபதி: அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி சொல்லுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானம் கொடுத்துவிட்டு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அதை எழுப்புவது என்பது எந்த அடிப்படையில்? உறுப்பினர் தீர்மானம் கொடுத்ததின் பேரில் அரசின் சார்பில் கேட்டறிய வேண்டும். தீர்மானம் கொடுக்காமல் எழுப்பியிருந்தால் கூடப் பரவாயில்லை. கொடுத்துவிட்டு எழுப்புவது முறையல்ல.

தாங்கள் எழுப்பியது அத்தனையையும் நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன். தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள், உட்காருங்கள்.

(4) 1978-79 ஆம் ஆண்டுக்கான மாணியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

'மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 35,65,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

(முற்பகல் 10-10)

திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, வீட்டுவரி ஈட்டுமானியத்தை ஊராட்சிகளுக்கு இரண்டு மடங்கு அளவு தர கோரி விவாதிக்க—' மானியக் கோரிக்கை எண் 28, சமுதாய

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.